5 டிசம்பர் 2021

Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகை காலம் 2ம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**அஞ்சாதீர்கள், நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்**

# கடவுள் நம்மை மறக்கவில்லை



மாந்தரிடையே குடிக்கொள்ள வரும் ஆண்டவருக்காக மகிழ்ச்சியோடு காத்திருக்கும் இக்காலத்தில் நம்மோடு உரையாட அழைக்கும் அவரைப் போற்றி நன்றி கூறிடுவோம். **துன்பமும் துக்கமும் அவநம்பிக்கையும் கொண்ட நேரத்தில், ஊக்கமூட்டும் வார்த்தைகளைக் கடவுள் தருகிறார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.** நாம் மகிழ்ச்சியும் எதிர்நோக்கும் கொண்ட மக்கள் என்பதை மறக்கலாகாது. நாம் நம்பும் கடவுள் கைவிட மாட்டார். “ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்; அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகின்றோம்”.

முதல் வாசகத்தில் கடவுளின் இரக்கத்தையும் நீதியையும் நாம் படிக்கிறோம். பாபிலோனுக்குக் கடத்தி செல்லப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்குக் கடவுள் ஆறுதல் அளிக்கிறார். அந்நிய நாட்டில் அவர்களின் எதிர்காலம் என்ன ஆகுமோ, மீண்டும் தாயகத்திற்குத் திரும்பி குடும்பங்களைக் காண்போமோ என்ற கவலை மேலோங்குகிறது. கவலை வேண்டாம், தளர வேண்டாம் என கடவுள் அவர்களுக்கு ஊக்கமளிக்கிறார். அவர்களின் மரியாதைக் காக்கப்படும். அவர்களுக்கு அரசப்பட்டாடையும் மணிமுடியும் சூட்டப்படும். ஆண்டவரது மாட்சியிலும் நீதியிலும் இரக்கத்திலும் அவர்கள் பாதுகாப்பாக நடந்து செல்வர்.

அவ்வாறே, கடவுள் நம்மையும் மறந்து விடவில்லை. மனுக்குலமே அவரது அரவணைப்பில், நேர்ப்படுத்தி செம்மைப்படுத்தப்பட்ட பாதையில் செல்லும். அவரோடு விண்ணக முடிவில்லா மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லப்படுவர். இவ்வேளையில் நம் மத்தியில் அகதிகளாக-புலம்பெயர்ந்த மக்களாக வாழும் சகோதர-சகோதரிகளை நினைவில் கொள்வோம். இஸ்ராயேலர்களை போல் இல்லாமல் இருந்தாலும், இவர்களின் சூழ்நிலையும் அவர்களைப் போலவே உள்ளது. ஆகவே இவர்களுக்கு நாம் எவ்வாறு உதவுகிறோம்?

நம் மீதான கடவுளின் அன்பையும் நினைவுப்படுத்தப்படுகிறோம். பிலிப்பிய மக்கள் மீது புனித பவுல் காட்டிய அன்பு குறைவானதல்ல. ஆகவே, பாவ நாட்டத்தை விட்டொழிக்க உதவும் மகிழ்ச்சி, புனிதம், அறிவு, துய்த்துணர்வு ஆகியவை புனிதர்கள், பெற்றோர், குருக்கள், நண்பர்கள் மற்றும் சமூகத்தின் இறைவேண்டல் நம்மீது பொழியப்படுகிறது. மனமாற்றத்தோடும் தாழ்ச்சியோடும் கடவுளை நாடுவோம்.

இரக்கமும் நீதியுமான இறையியல்பை அணிந்து கொண்டு, நம்மோடு இருக்கும் இம்மானுவேலின் குரலுக்கும் உலக மற்றும் திருஅவையின் தேவைக்கும் அக்கறையோடு செவிகொடுப்போம். திருமுழுக்கு யோவானை போல் அவரது வருகையை அறிவித்து சாட்சிகளாக விளங்குவோம்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

“மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்.”

(லூக்.3:6)

**இன்றைய வாசகங்கள்:**

பாரூ. 5: 1-9;
திபா. 125: 1-6;
பிலி. 1: 3-6, 8-11;
லூக். 3: 1-6.

INTERNAL CIRCULATION ONLY
BUL 49/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org